அட்டவணை

282

282

அட்டவணை 1

கல் நண்டு வடகம்

கருங் கோழி பற்பம்

பரங்கிப் பட்டை லிங்கப் பதங்கம்

6 வகை பீனசத்திற்கு சந்தனத் தைலம் இரச குளிகை
கல்லடைப்பு துர்-மாம் சத்திற்கு மருந்து.

இராம பாணத் தைலம் ஜுரக் குழம்பு-இருமல்கடி
யத்திற்கு மருந்து இருமலுக்கு ஆடா தோடை.

ஐந்தெண்ணைத் தைலம் அரிதார பற்பம்-தாளகம் சுத்தி
வகை மேக சுவணி மருந்து.

சிந்தாமணி குளிகை தாளீச வடகம்

எரி ஜன்னி மருந்து சிந்தாமணி குளிகை

தாக ஜீரத்திற்கு மருந்து

ஜன்னி பதி மூன்றுக்கும் நிதானம்-சித்த விப்பிரம ஜன்னி நிதானம் கண்டக
ஜன்னி நிதானம்.

கசப்பு நோவு நிதானம்

வாத ஜீரத்தின் குணம் பித்த ஜீரத்தின் குணம்

காசத்திக்கு குணம்

இரத்த பித்த குணம்

வாத ராக்ஷத குளிகை-தாம்பிர பற்பம்

கற்பூர சில சத்து பற்பம் தாம்பிர பற்பம்

பண்டுரம் விந்தம் அயம் செம்பு

பரங்கிப் பட்டைச் சூரணம் பிரதபச் சூரணம்

அஷ்ட ரசம் வெடியுப்பு கட்டு திட்டம்

ஜீரத்துக்கு மருந்து பாஷாணம். கௌரி பாஷாணம்

துத்தம் குன்மத்துக்கு மருந்து

பாஷாண கட்டுத்தாளக் கட்டு-பூரக் கட்டு வாயுவுக்கு மருந்து

லிங்கக் கட்டு ஜீரத்திற்கு

நேத்திர நோகம் வெள்ளெழுத்து

எலி கடி நோய்கட்கு மருந்து நாலா மாறலுக்கு

குளிருக்கு மருந்து

மலம் ஜல மடைத்தால் மருந்து சஞ்சீவி அக்கினி குமார செந்தூரம்

வாய்வுக்கு மருந்து கண்ட மாலைக்கு மருந்து சர்வ ரோகத்திற்கு மருந்து

குளிர் சுரத்திற்கு-கொடிப் பவுத்திரத்திற்கு ஆசன பவத்திரத்திற்கு மருந்து

வாத ஜீரத்தின் நிதானம் பித் ஜீரத்தின் நிதானம் சிலேஷ்ம ஜீரத்தின் நிதானம்
தொந்த ஜீரத்தின் நிதானம் இதுகளுக்கு கஷாயம்

டமார நந்தர் சூத்திரம் பதினாறு.

சூரியானந்தர் சூதிரம் பதினாறு பதிமூன்று

அகஸ்தியர் ஞானம் மூன்று

சுக ஜன்னி

குமன ரோகம்

கண்ணோயின் நிதானம்

அஸ்தி ஜன்னி வியாதி தைலம் ஜீரத்துக்கு மாரல்

ஜன்னி பாத கேசரி தைலம்

கண்டாத்திரி லேகியம் மூல வியாதிக்கும் மருந்து ஜன்னி நாயகத் தைலம்

கையாந்த கரை எண்ணெய்-நிம்பத் தைலம்

சூதக வாய்வுக்கு மருந்து-கண்டாத்தி லேகியம்

அரக்குத் தைலம்

நெலிக்காய் தைலம்

நிற்குன்றி தைலம்-இடி மருந்து

காருங்கா வில்வாதி லேகியம்

கிரந்தி என்ணெய்.

காச்சலுககு கஷாயம்-பச்சை நாவி சுத்தி வெங்கார சுத்தி

அரிதாரம்-நேர்வாளம் இரசம் இதுகள் சுத்தி

பிரமியம்-ஜன்னி காமாலை பாண்டு சோகை }

இதுகளுக்கு மருந்து }

ஊது காமாலைக்கு சூட்டுக்கு-பேதிக்கு

வயிற்றுக் கடுப்புக்கு வீரிய விருத்திக்கு

பதினெட்டு வகை_ஜீரத்திற்கு இருமலுக்கு மருந்து

சவுரியார் குழம்பு-ஜாதிலிங்கம் சுத்திபன்னி எலி பாஷாண சுத்தி துருசி சுத்தி

சர்வ சஞ்சீவி மாத்திரை ஆன்ந்த பைரவி மாத்திரை வயிற்று வலி கடுப்பு }

காது கேழ்காததற்கு காதில் சீழ் விழுந்தால் இதுகளுக்கு மருந்து }

சீத ஜீரத்திற்கு மருந்து வீர பத்திர குளிகை வயிறு வெள்ளெடுப்பக்கு }

மருந்து தோஷத்திற்கு காது கேளாததற்று காது வலி மேக ஜன்னிக்கு }

இதுகளுக்கு மருந்து. }

ஜன்னிக்கு நசியம்-கலிகம்-ஜன்னிக்கு என்ணெய் ஜாதிலிங்கக் கட்டு

சுரத்தின் மேல் சிலேற்பனக் சூட்டுக்கு சீதசுரத்துக்குக் கணிக்கம்-பிட்டு }

வகை சிலேற்றுமச் சுர நீர் கட்டுக்கு முதலான வகைக்கு மருந்து }

சர்வ அதிசாரத்திற்கும்-அக்கினி மந்தம்-ச்ததி விக்கலி-வாந்தி இவைகளுக்கு மருந்து

அரோசியம்-சுரதோஷம்-சன்னி வகைகளுக்கு மருந்து...

அமிர்தாதி சூரணம்-மந்தாக்கினிச் சூரணம் வல்லாரைச் சூரம்.

20.7.62. *******

17.7.62. கல் நண்டு வர்க்கம்.

1. உற்றதொரு சமுத்திர மாந்தன்னில் பிறந்த
உசிதமென்ற கல் நண்டாமதனின் செய்கை
கற்றவர்களறிவார்களல்லால் வேறே
கசடருக்குத் தெரியாது தெரியாதய்யா
குற்றமற்றோர் தெரிந்தெடுத்துச் செய்து கொள்வார்
கூறுகிறோம் நன்றாக நீயுங் கேளு
சுத்தமாம் பொரி காரம் விராகனி ரண்டு
சூட்சமுடன் நல்ல ஜலமொரு படியும் வாரே.

2. வாரப்பா எட்டொன்றுக் காய்ச்சியந்த
வடித்தே வல்லமையுடன் நன்றினக் குன்றியளவு
உரைத்து நீர்ப் பூவென்ற கஷாய மதில்
கரைத்து நிர்ணயமாய் கொடுத்துவிட
நீரடைப் பன்போகும் பாரப்பா வென்று சொல்லும்
கல்லடைப் பன்னும் படுத்தாது படுத்தி வைக்கும்
நீர் இருப்பான்குத்து ஆரப்பா பொருக்கிற தென்றே.
அழுது புலம்பும் அலய மிருதற் மாங்கிச அடைப்பறவுமாமே.

3. ஆமே தான் கிருச்சின மாம் பதினெட்டான்
அசடான அன்ப முதலெல்லாங் போக்கச்
பாமேவு தேனதில்கல் நண்டா மதனை
பண்புடனே அந்தி சந்தி குன்றியளவரைத்தே
தாமேதான் மத்தித்து மூன்று பொழுதருந்த
கண்டொளித்து போச்சுதடா சன்னி பத மூன்று
நாமே தான்றிருக்கும் வாத மென்பதுக்கும்
நலமான மூச்சுரைச் சரணையின் வேரே.

4. வேறுடனே மாவிங்கம் பட்டையுமே சேர்த்து
விரும்பிக் கசாய மதில் கல் நண்டா மதனை
சீருடனே குன்றியள வரைத்துருட்டி
சிறப்புடனே கஷாயமதில் கலக்கி நன்றாய்
ஆருடன் பேசாமே மூன்று நாளும்
அடலுடனே அந்தி சந்தி கொள்ளும் போது
ஊருடன் பகைத்தவன் போலப் பயந்தே ஓடி
ஒழிந்ததடா வாத மென்பதுவு ந்தானே.

5. தானே தான் போச்சுதடா. அற்புத வாதமுமே
தவறுதலே பண்ணி வைக்குமானை வாதம்
உன்னைத் தான் வாட்டி வைக்கும் குதிரை வாதம்
உற்பனங்கள் சொல்லு மந்த மாயில் கோணல்
யேனே தானென்ற தொரு நாடி பூட்டல்
யெளி முகத்தில் முகவாதசன்னி தானே.

6. தானென்றிருக்கும் கழுத்து வாதம் பிடரி
நாவில் நாரம் பிசிச் சுவிரச்சதுவு தானே போச்சு
போச்சுதடா உள்ள சந்தம் பனுத்த மென்ற
பொல்லாத வாதமெல்லா மெங்கே போச்சு
காச்சலென்று பேர் பெற்ற சுரம் அருபத்து நாலும்
கலங்குமடா சீரகம் கஷாயமதிலேதான்

வீச்சதென்று சொல்லுகின்ற கல் நண்டாம் தலை விரைத்து
தரைத்து பனவிடைதாள் சுக்கு ஜாய்மதில்
கரைத்து மாச்சலில்லாதே மூன்று நாளதுவு
மருந்தில் மாண்டுதடா சுரங் காச்சலெல்லாந் தானே.

7. தானென்ற எலிச் செவியாம் விரையதனை யரைத்துத்
தப்பாமல்கொட்டைப் பாக்களவிதிலே மைந்தா
யேனென்று சொல்லாமல்கல்நண்டா மதுவை
யின்பாக குன்றியள வரைத்துச் சேர்த்தே
உருண்டையதை யிருக்கும் வாத பித்தம்
முத்த சிலேற்பனமும நீறிவுக்கெல்லாம்
தேனென்ற மொழியுடைய பாவைகள் கையால்
தினம் மூன்று நாள் கொள்ள நீரழிவு போச்சே.

8. போச்சுதடா குட்ட மென்ற பதினெட்டுந் தான்
பேர் பெரிய சிவந்தடைய வேம்பிலிட தயிலம்
வாச்சுதடா லென்று சொல்லி காசளவிலப்பா
மங்கத்தினை கல்நண்டில் சொல்லியிருந்திடமல்
யிப்போதே ரெண்டு மொன்றுய்ச்
சேர்த்து ஆறு நேரம் நீச்சுதல்லாமலே கொடுத்திடும் போது
கெட்டுதடா குட்டம் பதினெட்டும் பாரே.

9. பாரப்பா பாடவரைச் சாற்றிலே தான்
பண்பான கல் நண்டா மதுவு சேர்த்தே
காரப்பா என்று சொலி மூன்று நாள் தான்
கருதியே கொடுத்திட வூதகுத னையா மதவ்
ஆரப்பா தீர்ப்பதென்று சொல்லுவதாம்
பெரிய மகிறத் குலரம் மென்ற தொரு பெரு வியாதியுமே
உள்ளப் பாவிடாமல் அறகாத வனிான்
ஓடி மிக போச்சுதடா போச்சு போச்சே.

10. போச்சுதடா விஷமென்ற தெல்லாத்துக்கும்
புகழ் பெரிய தென்முட்டியினென் சறிலே தான்.
வாச்சுதடா என்று செல்லிகல்நண்டு மதுவும்
வகையாகச் சேர்த்திட மெள்ளக் கொடுக்கும் போது
ஆச்சுதடா வென்று சொல்லு மகா விஷயுங்குளெல்லாம்
அறு நூற்றுக்காத வழிக்கப் புரத்தில் போஅம
போமே தான் கீரியுட அவ்ரஞ் சாற்றில்

11. புகழான கல்நண்டு மதுவும் உரைத்தே
ஆமென்று சொல்லிக் கொடுத்திடும் போது
அகண்டுதடா பேய் நரியும் பேய் நரியின் விஷமுமே
விஷமென்று உன்மத்த பயித்தியமும் போக
விளங்கிய தோர் தேசிக் கார்சல் நண்டும்
தோத்தும் நிசமென்ற பனிரெண்டு நள் கொள்ளும் போது
நில்லாதே பயித்தியம் உன்மாதமே
நசலான குமர கண்டன் வலிபும் நாடாதே
போவென்றுல்உத்தம மாந்தாளி குசலமல்கொண்டு சார் பிழிந்தே.

.....

கருங் கோழி

கருங் கோழி பற்பம்.

கார்ந்தம், கடுகு மிளகு, மருதோன்றி இலை, அரிதாரம், கெந்தகம், சாதிலிங்கம் ஓமம், வெண்காரம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வாய் விளங்கும் கல்மதம் கல்நார் குக்கில், மூங்கலரிசி, வெட்பாலை அரிசி, காட்டுச் சீரகம் கடுகு, ரோகணி, குரோசாணி, ஓமம் இந்துப்புத் தித்தம், கருசு, சுக்கு அபின் கருஞ்சீரகம், வெந்தயம் சீரகம் ஏலம், சவ்வீரம், கார்போகயரிசி, பெருங்காயம், வெள்ளைப் பஷாணம் கெவுரிப் பாஷாணம் பறங்கிப்பட்டை, குளவிந்தம், நேர்வாளம், இரசம் விளாவரிசி, கோழுகமயரிசி, நவாச்சாரம், எவாச்சாரம், சத்திச் சாரம் முதலான 5 வகை சாரம், கொள்ளுப்படி மூன்று. கொடிவேலிவேர் வீ.6, வெள்ளருகு வேர், விராகனிடை இரண்டரை, சிவனார் வேம்பு, விராகனிடை இரண்டு அரை, சிவந்த வேர் விராகனிடை பத்து, சங்க வேர் விராகனிடை இரண்டரை-நாய்க் காடுகரிசி விராகனிடை இரண்டரை- இதுக்குச் சாறுவகை பசுவின் கோமயம், படி. கொள்ளுபடி மூன்று தும்பைச் சாறுபடி ஒன்று நொச்சிச் சாறுபடி ஒன்று, கொடிகக் கன்னிச் சாறு படி ஒன்று, பொடுதலைச் சாறு படி ஒன்று திருகு கள்ளி, சிவனார் வேம்பு யிடு ரெண்டும் துவைத்து இந்தச் சாற்றில் போடவும். இந்த கடை மருந்து வேர் கனி* வகையிதை பொடி செய்து கருடங் கோழியில் மயில் போக்கி வாட்டி குடல் ஈரல் எடுத்துப் போட்டு முழங்கால் குழி செப்பட்டை போக யிந்த பொடியை கோழியில் கோழியில் செலுத்தி பானைக்குள் ளே இந்த சரத்தை விட்டு இந்தக் கோழியை கோன் ரெட்டில் கிளி கட்டிப் பானைத் தண்ணீரில் படாமல் மத்தியிலே விட்டு, சட்டி போட்டு மூடி மண் சீய்து ஒரு சாமம் காலாக்கி னியாய் தீ யெரித்து எடுத்து எலும்பு பேக்கி துவைத்துக் காயவைத்து வடிகட்டிக் கொண்டு சாப்பிடவும். தேனில் வெருகடிப் பிரமாணம் மகோதரம் நீராமல் பொருமல் பெருவறறு குன்மம் எட்டும் தீரும்.

பத்தியம்:- உள்ளான் சிவல் காடை அக்குருவி தள்ளாதிருவிர, சுராபானம், வெள்ளாட்டுக் கண்டம், முருங்கைக் கீரை, பசுவின் நெய், அரக்கீரை, கவுதாரி, கோழி முட்டை, முழுக விளக்கெண்ணை உசிலம் பொடியிதுவாகும்.

பறங்கிப் பட்டை லிகப் பதங்கம்.

பறங்கிப் பட்டை, சேரு இரண்டு சாதிலிங்கம் விராகனிடை எட்டு கெந்தம் சேரு இரண்டு ரசம் விராகனிடை எட்டு பரங்கிப்பட்டை வயப்பாக்கு போலே சீவி மேல் கலசம் து குரைப் பொத்து அதிலே பன்னுடை வைத்து அதிலே பறங்கிப்பட்டைத் தூளைக் கொட்டி அதற்குக்கீழ் கலசம் வைத்து அதிலே கெந்தகம் சாதிலிங்கம், ரசம் இதை கெட்டி வேலிச் சாறு விட்டு அரைத்து அந்தக் கீழ் கலசத்தில் போட்டு அதன் பேரில் பறங்கிப்பட்டை போட்டு வைத்திருக்கிற கலசத்தை வைத்துடச சீலை மண் செய்து அடுப்பில் வைத்து ஒரு சாமம் எரிக்கவும். மருந்து பிகைந்து மேல் கலச மருந்தில் பாயும். ஆரவிட்டெடுத்து சுக்கு ரூபாயிடை இரண்டு போட்டு இடித்துச் சக்கரை கலந்து சாப்பிடவும்.

6-வகைப்பிளசத்துக்குச் சந்தனத் தயிலம்.

கத்தாழைச் சாறு ஒன்று கப்பான் சாறுபடி இரு* ஒன்று பொன்னாங்காணிச் சாறு படி ஒன்று சிறு கீரைச் சாறுபடி ஒன்று நெல்லிகாய்ச் சாறுபடி ஒன்று ஆனை நெருஞ்சிச் சாறு படி ஒன்று இளநீர் எலுமிச்சம் பழச் சாறு படி ஒன்று பசுவின் பால், நல்லெண்ணெய் படி மூன்று கடை மருந்து சந்தனம் வீ இரண்டு வெட்டி வேர் வீ. இரண்டு, இஞ்சி பலம் 5, குங்குமப் பூ விராகனிடை இரண்டு கோரோசனை வீ.2, பூலாங்கிழங்கு வீ.2, சன்ன லவங்கம் வீ.2, அதிமதுரம் வீ.2, ஏல வீ.2, மிளகு வீ.2, கஸ்தூரி வீ.2, சர்க்கரை வீ.2, மஞ்சள் விராகனிடை இடைத்து கரைத்துப் பதம் கொண்டு தலைக்குத் தேய்த்து முழுகவும். பத்தியமாயிருக்கவும்.

இரச முளிகை.

சீந்திக் கொடி பொடி குருணி, ஒரு மிடாவில்ப் போட்டு ஒரு பச்சைத் தவளையை வைத்து அதன் வாயிலே பத்துவிராகனிடை ரத்தை விட்டு வாயும் சுத்தி தைத்து பானைக் குள்ளே குழிலே வைத்து கானை எயில் சீலை மண் செய்து வைத்து ஆறு நாளைக்குப் பிறகு அந்தத் தவளையை எடுத்துப் பார்க்கச் தவளை சகாதிருக்கும் அயின் குளிகையாய் உருண்டிருக்கும். அந்தக் குளிகையை எடுத்து வெள்ளித தாயித்திலடைத்துச் சுங்கிலி பண்ணிகழுத்திலே போட்டுக் கொள்ளவும். ஜமத்தால் சமூலமிடித்து பொடி செய்து ஆறு மரக்கால் பொடி ஒரு பானையிவிட்டு ரசத்தை தவளை வாயில் விட்டு சூத்திரம் வாயும் அடைத்து அதையும் அப்படி வைத்து ஆறு மாதத்துக்கு அப்புறம் எடுத்துப் பார்க்க தவளை செத்துப் போயிருக்கும்.

கல்லடைப்பு புருத்திரம் சத்துக்கு மருந்து.

நந்திப் பூசணிக்காய் குடல் விரை போக்கி துருவி ஒரு பாண்டத்திலிட்டு வறுத்துத் தேன் வர்ணப் பகுக்குவத்தில் திப்பிலிநற்சீரகம் கருஞ்சீரகம், ஏலம் கருவாப் பட்டை, சமுத்திரா பச்சை இலவங்கம், ஒன்றுக்குப் பலம் ஒன்று சாதிக்காய் சதிப் சாதிப்பத்திரி குரோசுணி, ஓமம் இவை வகைக்குப் பண் இ. இது வெல்லாம் பொடி செய்து போட்டு கிண்டி கற்கண்டு பலம் அருபத்தைந்து சீனி பண் ஆறு கூடப் போட்டு நெய்படி அரை தேன் படி.இ விட்டுக் கிண்டி இறக்கிக் கொண்டு தான்றிக்காயளவு சாப்பிடவும். பிரமேகம், கல்லடைப்பு, தூர்மூாமிசம் அடைப்பு, சதையடைப்பு, இருமல், க்ஷயரோகம் இவையெல்லாம் தீரும்.

இ ர் ா ம பா ன த் த யி ல ம்.

வேப்பெண்ணெய் படி, கோழி முட்டை20, மஞ்சம் கரு கூட்டி பிரமியிலை அவுரியிலை முடக் கொத்தான் சென்பதாளை, அமிஞ்சியிலை நொச்சியிலை, வேளாம் பட்டை மாவிலிங்கப் பட்டை, கிழ கிழப்பை பெருந்தும்பை ஒன்றுக்கு சமம் விட்டிறக்கவும்.

சூ ர கு ழ ம் பு.

சூதம் நாலு, சீலை இரண்டு, துய்ய கெந்தகம், நாலு, ரெட்டி கால் காந்தம் அதக்கு ரெட்டி கத்த விரோசினம், அதுக்கு ரெட்டி ஏலம், மூன்றி நேர்வாளம் இலாமிச்சம், குமரிச் சாத்தாலரைத்து தாலம் தனிலே அப்பி வைத்தால் தரைலாயெரி யும் அன்டரே - குளத்த குன்மம் பெருவயறு கன்னர் மின்டுகிலுசை பெருங் குருவான்ர் வயற்றெரிவு - சோறு செரியாமை - புளிச்சேப்பம் - உட்னே அக்கினி மந்தமிவை களுக்கு தேனில் கொள்ள குணமாகும்.

இருமல் க்ஷயத்துக்கு இருந்து.

வெட்டிவேர், நெல்லி முள்ளி, சீரகம், இலவங்கப்பத்திரி, கோஷ்டம் ஏலம், முந்திரிப் பழம் குங்குமப் பூ சிறு, நாகப்பூஇ சந்தனம், சுக்கு, அரிசித் திப்பிலி, மிளகு, அதிமதுரம், கர்க்கடக சிங்கி, சாதிக்காய், தக்கோலம், சீனிக் கல் கண்டு, அகில் கட்டை, சாதிப்பதிரி, சன்னலவங்கப்பட்டை, அக்கிராகாசம், வாய் விளங்கம் அரத்தை கருஞ் சீரகம் கிராம்பு ஆக மருந்தொன்று விராகனிடை ஐந்து சேர்த்துக் கொண்டு மருந்து முடித்துக் கொள்ளவும்.

இருமலுக்கு சூடாதோடை நெய்.

சுக்கு விராகனெடை ஐந்து, திப்பிலி விராகனிடை ஐந்து, மிளகு விராகனிடை பத்து, கோரோசனை விராகனிடை ஐந்து, வால்மிளகு விராகனிடை இரண்டு, சித்த ரத்தை விராகனிடை ஐந்து, சீரகம் விராகனிடை ஐந்து, கடுக்காய் விராகனிடை ஐந்து சிறு,

சிறு தேக்கு விராகனிடை ஐந்து, ஈரவெங்காயம் விரகனிடை பத்து, கற்கடக சிங்கி, விராகனிடை இரண்டு, தாளிசப்பத்திரி விராகனிடை பத்து, ஏலம் விராகனிடை இரண்டு நெல்லிமுள்ளி விரகனிடை நாலு கோஷ்டம் விராகனிடை இரண்டு, கொத்தமலி விராகனிடை நாலு, பசுவின் நெய் படி அரை ஆடாதோடைச் சாறு படி அரை—கட்டி நெய் வடித்துக் கொள்ளவும்.

ஐந்திலிறெய்த் தயிலம்.

வெள்ளைப் பாஷாணம் பலம் கால், கெவுரி பாஷாணம் பலம் கால், குதிரைப் பல் பாஷாணம் பலம் கால், தொட்டிப் பாஷாணம் பலம் கால், எலிப்பாஷாணம் பலம் கால், அரிதாரம் பலம் கால், மனோசிலை பலம் கால் கெந்தகம் பலம் கால், சதிலிங்கம் பலம் கால், துருசு பலம் கால், வெள்ளைக் குங்கிலியம் பலம் முக்கால், குன்றி மணிப் பருப்பு பலம் கால், சதுரக் கள்ளிப் பால் படி காலி, விளக்கெண்ணை படி கால், இலுப்பெண்ணெய் படி கால் வாழைப்பூச் சாறு படி வெத்திலைச் சாறு—நல்லெண்ணை படி ஒன்றே கால்—கட்டி தயிலமிறக்கவும்

அரிதாரம் பற்பம்.

பேரண்டம் கொண்டு வந்து விலை நறுக்கி அமுரியும் பூ நீரும் கலந்து அதில் போட்டுக் கொதிக்க வைக்க தயிலம் கக்கும். எடுத்துக் கொட்டிக் கள்ளி கொண்டு வந்து சாறு வாங்கிக் கொதிக்க வைத்து சுத்தி பண்ணின அண்ட ஒட்டையதில் போட்டுக் கருகாமல் பிரட்டி எடுத்து கழியம் மியில் வைத்து பஞ்சு போலாட்டி அமுரி பூ நீர் போட்டு தெளிய வைத்து அதில் விட்டரைத்து வில்லை தட்டிக் காயவைத்து தாளகக் கட்டியை அதுக்குள்ளே வைத்து உத்தம தாளியை யரைத்து மேல் குகை பிடித்து இரண்டு சீலை மண் செய்து கோழிப்புடம் போடத் தீரும்.

தாளகம் சுத்தி வகை.

தாளகம் கட்டி வாங்கி வந்து அதுக்குச் சுத்திக்கு கொடுக்கிறது. கல் சுண்ணம் எலுமிச்சம் பழச்சாறு காயி அமுரி பனங் கள்ளு இது நாலும் விட்டு கறண்டியை அடுப்பில் வைத்து அதில் தாளக் கட்டியை வைத்து சுருக்கு கொடுக்கவும். இந்தக் கட்டியைப் புடம் போடவும்.

மேகசுவக்கி மருந்து.

ரசகற்பூரம் வி. 4, சுண்ணாம்பு ஒரு பாக்களவும், மஞ்சள் ஒரு பாக்களவும் இரண்டையும் பச்சைத் தண்ணீரில் போட்டு ரச கற்பூரம் கட்டியை ஒரு ராத்திரிக்கு அதில் போட்டு வைக்க சுத்தியாகும். முடக் கொத்தான் சாறு படி—இ. கோவை இலை சாறு படி—இ.

சிந்தாமணிக் குளிகை.

சாதிலிகம் விராகனிடை ஒன்று, பெருங்காயம் விராகனிடை, ஒன்று, வெண் காரம் விராகனிடை ஒன்று இந்துப்பு விராகனிடை ஒன்று, மதிமதுரம்ஷ்டி விராகனிடை ஒன்று அதிவிடையம் விராகனிடை ஒன்று, வாய் விளங்கம் விராகனிடை, ஒன்று, ஓமம் விராகனிடை ஒன்று, திரிகடுகு விராகன் ஒன்று, தாளிக்காய் விராகனிடை ஒன்று, கடுக்காய் விரகனிடை ஒன்று, சுத்தி பண்ணின நேர் வாளம் விரகனிடை எட்டு, இவை யெல்லாம் எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்துக்கடலைப் பிரமாணம் உருண்டை செய்து சுரங்களுக்கு கொடுக்கிற அனுபானமாவது—சுக்கு கடுக்காய் தட்டில் போட்டு வேக விட்டு ஒரு சங்குக் கஷாயத்தில் ஒரு உருண்டை கொடுக்கவும்.

பல்லு கட்டின சன்னிக்கு தேனில் இரண்டு உருண்டையிடவும்—வளப்புக்கு பசுவின் நெய்யில் ஒரு உருண்டை குழைத்துக் கொடுக்கவும். உப்பு மீறிலுல் மோறு தி சோறும் கொடுக்கவும்—வயிறெருக்காதே போனால் மோருஞ்சாறு காய்ச்சிக் கொடுக்கவும். கடுப்பு வந்தால் நெய்யும், தயிரும் கூட்டவும். சன்னி பதிமூன்றுந் தீரும்.

தாளிச வடகம்.

தாளிசப்பத்திரி கழஞ்சி இரண்டு, மிளகு கழஞ்சி இரண்டு, செவ்வியம் கழஞ்சி இரண்டு, திப்பிலி கழஞ்சி நாலு, திப்பிலிமூலம் கழஞ்சி நாலு, சுக்கு கழஞ்சி பனிரெண்டு, கடுக்காய் கழஞ்சி இரண்டு, நெல்லி முள்ளி கழஞ்சி2, ஏலம் கழஞ்சி இரண்டு, இலவங்கப்பட்டை கழஞ்சிஇரண்டு, கிராம்பு காசு கழஞ்சு இரண்டு, சாதிக்காய் கழஞ்சி இரண்டு, லவங்கபத்திரி கழஞ்சி இரண்டு, விலாமிச்சன் வேர் கழஞ்சி இரண்டு, இது வெல்லாமிடித்து உலர்த்தி காயும் செய்து இந்த சூரணமிரண்டு பங்கு சக்கரை ஒரு பங்கு கட்டிப் பானையில்கூடா தோலை கண்டங்கத்திரி சமூலமும் மிடித்து பானையில் போட்டு பதக்குத் தண்ணீர் வார்த்து வேடு கட்டி வேடு மேலே சூரணத்தை வைத்து விட்டாக வெந்த பிறகு எடுத்து இலந்தை அளவு உருண்டை செய்து வைத்துக் கொண்டு ஏட்டிலே ஒரு உருண்டை தேனிர் பிரட்டி அடக்கவும். இப்படி மத்தியானத்துக்கும் சாயாங்காலத்துக்கும் நாள் ஒன்றுக்கும் மூன்று நேரமும் அடக்கவும். தோலையுமிந்து போடவும். உருண்டை ரசம் விழுங்கவும்.

தீரும் வியாதி:- வாதபித்தம், சேற்றமம், அரோசிகம், செரியாத்து, அக்கினி மாந்தம் விடாமல் காயும் காய்ச்சல் குளிடிய விழுந்திருக்கிறது தீபமுண்டாயிருக்கும் மலம் நெகிழ்ந்து விழுதிருக்கிறது விழுமிது எல்லாவற்றிற்கும் ஆகும். இதற்குப்பத்தியம்:- பூசனிப் பழம் பசுவின் நெய், துவரை, மிளகு, நீர், உப்புக் கண்டம், அயிரைமீன், குஞ்சு, மீன் கவுதாரி, பாலிருக்கிற கோழிக்குஞ்சு.

எரி சன்னிக்கு மருந்து.

நொச்சிசிறு கீரை பொன்னாங்கண்ணி கருசிலாங்கண்ணி சாட்டறணை மணத்தக்காளி நெருஞ்சி நாய் வேளை நல்ல வேளை மொடக்கெத்தானிது வகை யெல்லாம் சரி, உழக்கு நல்லெண்ணெய் படி ஒன்று அந்தச் சாற்றில் எண்ணெயை ஊற்றி காய்ச்சி மெழுகுப் பதத்தில் எண்ணெயிருத்துக் கொண்டு தலை முழுகவும். கைப்புப், புளி தவிர்க்கவும். ஏனிசி ஆனி பன்னி பசுவின் நெய்யில் மூன்று நாள் தின்னவும்.

வெறு மருந்து.

மூன்று வருடித்துப் பருத்தியிலைச் சாறு வெள்ளாட்டுப்பால் அந்தச் சாறு விட்டு நற்சீரகம் சக்கரை கூட்டி கொடுக்கவும்.

சிந்தாமணிக் குளிகை.

நாவி கழஞ்சு ஒன்று; நிறிவிடம் கழஞ்சு ஒன்று, ரசம் கழஞ்சு ஒன்று, அரிதாரம் கழஞ்சு ஒன்று கெந்தக் கழஞ்சு ஒன்று, சாதிலிங்கம் கழஞ்சு ஒன்று, வெண்காரம் கழஞ்சு ஒன்று, அக்கிலா காரம் கழஞ்சு ஒன்று மிருளி கழஞ்சு ஒன்று, தான்றிக்காய் கழஞ்சு ஒன்று கடுக்காய் கழஞ்சு ஒன்று, நெல்லி வற்றல் கழஞ்சு ஒன்று, சுக்கு கழஞ்சு ஒன்று, மிளகு, கழஞ்சு ஒன்று, திப்பலி கழஞ்சி இரண்டு ஆக மருந்து பதினைந்தும் ஒருநிறையாக சுத்தி பண்ணி நேர்வாளம் ஒரு நிறையும், இதுஇரண்டும் சரியாகக் கூட்டி இதுக்கு கையாந்த கரைச் சாறு விட்டு ஒரு சாமம் அரைக்கவும். மற்றுநாள் அந்தப் படி அரைக்கவும். இப்படி இருப்தொரு நாளை அரைக்கவும். பிறகு துவரைப் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இந்தக் குளிகை ஆறுமா மாற விட்டு பிறகு எந்த வியாதிக்கும் இஞ்சிச் சாற்றிலிடவும். வாதத்துக்கு குங்குமப்பூச் சாற்றிலிடவும். நெஞ்செரிப்புக்கு சர்க்கரை விடவும். சத்தியதி சுரத்துக்கு எலுமிச்சம் பழச் சாற்றி விடவும். காலிசிவுக்குச் சிறு காஞ் சோறியைஇலை சாற்றிலிட்வும்-நீர்க் கட்டுக்கு அம்மான் பச்சரிசி சாற்றிலிடவும். சன்னிக்கு குன்றியிலைச் சாற்றிலிடவும். சர்க்கரை கூட்டி விடவும். திரிச் தினையரிசி கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். சிர வாதத்துக்கு தூதுவளைக் கஷாயத்துடன் நெய்யும் கூட்டி இடவும்.

வறற்றெரிவுக்கு லவங்கப்பட்டைச் சற்றிலிடவும். இத்ப் பத்தியம் பாலுஞ் சோறு முன்னவும். வாத நோக்காட்டுக்கு நொச்சியிலைச் சாற்றிலாவது பசுவின் கோமயத்திலாவது கையாந்த கரைச் சாறுவது கொடுக்கவும். வியாதி அறிந்திடவும். குளிகை மோரிரெட்டுக் கொடுக்க வதமும் கிருமியும்தீரும். பிறக் குருணிக்குத் தயிரில் மூன்று நாள் கொடுக்கவும். வயற்று வலிக்கு எலுமிச்சஞ் சாறுடன் ஓமமும் கூட்டி இடவும். வாயுவுக்குக் கோயமத்திலிடத் தீரும். உப்பிடத்துக்குப் குப்பை மேனிச் சாற்றிலிடவும் குன்மத்துக்கு பசுவின் கேதயம்திலிடவும். காமாலைக்கு புளியிலைச் சாற்றிலிடவும். அண்ட வாதத்துக்குப் பாலிலிடத் தீரும். சகல வியாதிக்கெல்லாம் தேனிலிடத் தீரும். நெய்யிலிடவும். எரிக்குக்கச் சர்க்கரை யிலிடவும்.

தாக சுரத்துக்கு மருந்து.

அதிமதுரம், கோட்டம் சீரகம், சுக்கு, வெண்காரம், தேன் பஞ்சதாரை எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துக் நாக்கும் பல்லும் தடவி வழித்துக் கொப்பளிக்கத் தண்ணீர் தாகம் சுரமும் போம்.

[illegible]

இந்துப்புத் திரிகடுகு, பெருங்காயமும் வெண்காரம், அசமதாகம் கொம்மட்டி மாதளம் பழத்தில் தடவி நாவிலே தேய்க்க தவனமும் சுரமும் போம்.

வாந்திக்கு மருந்து.

மாதளம் பழம் அதிமதுரம், பஞ்சதாரை, தேன் எலுமிச்சன் பழச் சாற்றில் அரைத்து நாக்கில் தடவ வாந்தி போம். ஏலரிசி, எலுமிச்சன் விரை வெற்றிலை கிராம்பு சமனுகப் கூட்டிப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றில்குழைத்து நாவில் தடவ வாந்தி போம். வில்வப் புட்டை, இளநீரில் கொடுக்க வாந்தி போம். நெல்லியிலைச் சாறு திப்பிலிபஞ்சதாரை கூட்டிக் கொடுக்க பழய வாதி போம். மாங்கொழுந், நாவல் நாவ்லரி கெந்து கஷாயம் தேன் கூடிக் கொடுக்கத் தண்ணீர் தாவனம் தீரும்.

கொத்தமல்லி, சீரகம் இருவேலி சந்தனம், வெட்டிவேர், கோரைக்கிழங்கு கற்பூரம், கோஷ்டம் அதிமதுரம், தாமரைக் கிழங்கு அரசம் பட்டை, ஆலம் பட்டை, நாவல் பட்டை, திரிபாலை-சந்தில் கொடி இது தண்ணீர் தாவனத்துக்கு கஷாயம்.

சன்னி பதிமூன்றுக்கும் நிதானம்.

சன்னி நிதானம்:- சேற்றும் மதிகமாயிருக்கும், குலை நோக்காடு, போலக் கடினமாய் நோகும்-தாகமும், காசமும் அதிகப்படும், அழுவன்டாம், இது தாந்தீரிக சன்னி என்று பெயராகும். ஏழு நாளைக்கு மேல் இந்த சன்னி தீரும்.

தாந்திரிக சன்னி நிதானம்:- மெய் மறந்திருக்கும், சுர மதிகமாகும். சுவாக மதிகமாகும் தாகமுமாகும், உளரிக்கை யுமுண்டு, அதிசாரமாம், நாக்கிலே முள் போல கருப்பாயிருக்கும் கைக்கும் தொண்டையிலிதினவு தோன்றும். காது கேளாது. இது தாந்தீரக சன்னி என்று பெயர் இருபது நாளைக்கு மேல் தீரும்.

சித்தவிப் பிரம்ம சன்னி நிதானம்:- மாதம் போகம் வரும். அன்னவர் சிரிப்பும் பாட்டும் பிரலாபமும் அழுகையும் சரீரம் வர்ன பேதமாம் கஷ்டமாம். இது சித்த விப்பிரம்ம சன்னி யென்று சொல்லவும் பதிமூன்று நாளைக்கு மேல் தீரும்.

கண்டக சன்னி நிதானம்:- கழுத்து நோவும் சுரம் மூர்சசை யாகும், சுரமுண்டு, உடம்பு நடுக்கமும் அழுகையுண்டு, மோகம் நித்திரையுமுண்டு, சந்துகளெல்லாம் நோகும் தாகமும் பிரலாபமு முண்டு. ஜடிடுமிது பதிமூன்று நாளைக்கு மேல் தீரும்.

கன்னி சன்னி நிதானம்:- சுரமுண்டு, கதோரத்தில் வீங்கும், சுவாச மெடுக்கும், சிரேகம் நடுக்கும். வேர்வை யெடுக்கும். கழுத்து வீங்கும். தாப மெடுக்கும். நீர்

நீர் வாயில் அதிகமாகும். திரேகம் அனலாயிருக்கும், தலை சுற்றி வரும். உடம்பெங்கும் வியர்க்கும். வேதனையாம் அதிகாமுண்டு. வயிறு வங்கும், தாகம் கடினமாயிருக்கும். தாகமும் அதியுமுண்டு. இது சன்னிக சன்னியென்று பெயர். இது மிகவும் அசாத்தியம்.

அந்தக சன்னி நிதானம்:- தாகம் மோகம் தலை நடுக்கும்இருக்கமும் திரேகமெங்கும் நடுக்கும், காபமுண்டு. இது அசாத்தியம். மூன்று மாதத்துக்கு மேல் குணமாகும். இது கஷ்ட சாத்தியம்.

சிம்ம சன்னி நிதானம்:- நாக்கெல்லாம் முள்ளாகயிருக்கும். நாவுலர்ந்திருக்கும். காசம் சுவாசமுண்டாயிருக்கும். மறந்திருக்கும். காது கேளாது. வாய் பேசாது தாபமுண்டு. சத்துவமில்லை. இது கிமுக சன்னியென்று பெயர். இது பதிறு நாளைக்கு மேல் குணமாகும். இது அசத்தியமாயிருக்கும்.

புக்கு நேத்திர சன்னி நிதானம்:- மோகம், தாகம், பிரளபம் கழுத்தடி வேர்வை புக்கு மேதிர நிதானம். உப்பிசம் கண் சிந்திருக்கும். கண்மேல் புருவம் வீங்கும். கேளாது அதிகாரம் நித்திரையுண்டாம். இதுக்கு புக்கு நேத்திர சன்னி என்று பெயர். அசாத்தியம். இது ஏழு நாளைக்கு மேல் தீரும்.

ரக்திஷ்டி சன்னி நிதானம்:- சுரமுண்டு, ரத்த மெடுக்கும், மூர்ச்சையுண்டு, தாகமுண்டு பிரமையுண்டு. இது லக்ஷண முண்டானது. இது அசாதியம் பத்து நாளிருந்தால் பிழைப்பான்.

பிரலாப சன்னி நிதானம்:- பிரலாப மாதர் சிந்தையுண்டு கனல்உண்டு, பீசம் வங்கும். உளிரிக்கையாயிருக்கும். இது பிரலாப சன்னி என்று பெயர். இது அசாத்தியம். பதினு நாளைக்கு மேல் தீரும்.

சீதாங்க சன்னி நிதானம்:- சரீரம் குளிர்ந்திருக்கும். வாந்தி கக்கும். அதிகாரமுண்டு. உடம்பு நடுங்கும். தாபம் மேல்எழுந்திருக்கும். ஆராட்டம் விக்கல் உப்பிசம் அழலிக்கை யுண்டு. நாக்கும் காண்பியாது இது கடுங் சீதாங்க சன்னி என்று பெயர். இது கொல்லும் பதினைந்து நளிருந்தால் குணமாகும்.

அபிகாத சன்னி நிதானம்:- சிரிக்கும். ஆடும் பாடும், கூப்பிடும மகா கஷ்டமுண்டு. வைத்தியனை கண் சிவக்கப் பார்க்கும். அறிவிலிருப்பான், அபிகாத சன்னி இது வென்று பெயர். இது அசாத்தியம் பதினைந்து நாள் போனால் குணமாகும்.

கசப்பு நோவு நிதானம்

தலை கனத்து வலியுடாயருக்கும். குலையெரிவு அன்ரிக்கு மேல் படத் தொடுத்துக் காயும் கொருக்கிருமலுண்டாம். பசிண்டு, அன்னத்தைக் கண்டால் நடஞ்சு போலிருக்கும். வாதிக்கும், நாவு எருமை நாக்கு போலிருக்கும். வாய் நாற்றமாயிருக்கும். கண் சிசிவந்திருக்கும்: உடலெங்கும் சந்து நொறுங்க அடித்தாப் போலிருக்கும் இடைவிடாது அழர்ச்சியயிருக்கும். வெதுப்பும் குளிரும் கூடியிருக்கும். பித்த வாத நடி நடக்கும். சிறு நீர் சிவந்திருக்கும். மலச் சுத்தி தீய்ந்து விழும். இப்படி பல குணங்களுமுண்டாயிருந்தால் கசப்பு நோவென்று கொல்லப்படும்.

இதற்கு மருந்து:- நற்சீரகம்; கொத்தமல்லி, லவங்கப்பட்டை, அதிமதுரம் கல்நார் வெந்தயம், சுக்கு, சதகுப்பை, செங்கழு நீர், கோஷ்டம், கருஞ்சீரகம் செண்பக மொக்குத் திப்லி இவையெல்லாம் சம் கொண்டு தூள் செய்து ஒரு பிடி பசுவின் நெய்யில் எரித்து வைத்துக் கொண்டு காசிடை உள்ளுக்குக் கொள்ளவும். தீரும். இது ஒரு பங்குக்கு இரண்டு பங்கு நெய் கூட்டி எரிப்பது.

இதற்குப் பத்தியம்:- வெந்நீரும் சோறும் குளிர ஆற்றி உண்ணவும்.

வாதசுரத்தின் குணம்.

1. வாத சுரத்தின் குணம் சொல்லில் வயிறு பொருமும். வலியுண்டாம். தேகம் புளிக்கும் புளி போலிருக்கும். பொருந்தாது. பாதங் குளிரும் மலபந்தம் பாரத்தினவு உதடு வரும். உடலுங் கடுப்பாகும். சொல்லும் சுரத்தின் குணமிதுவே.

2. நீத்தித்திகைத்து மயிர்க் கருத்து மந்த தலையை நோவதுமாம் கடித்தாய முரி நிமிர்ந்து கண்ணும் வாயும் முகம் கருகி பிடிக்கி வாய் நீரவருவதுவும், மிசைக்கும் மிளைக்கும் வாயதுவர்க்கும். அடைக்கி வலிக்கு முடம்பெல்லாம் அரிவத மெல்லே.

3. வாதசுரமே குளிர் சுரமாம் வாய் நீர்திகைப்பு மயிர்க் குத்தும் போத முரித் தாகமுடன் புகள் வாய் குமுருந்தாறெடுங் கல் பேதகமாகத் தலை. கடிகை மிளாந்தாப் போல் நோய் கண்கந்தோல்காதுங் கருகி சுவாசமுடன் காசமிக வாங் கண்டேரே

பித்தசுரத்தின் குணம்,

1. பித்தச் ருத்தின் குணஞ் சொல்லிற் பித்த மலத்துமுடம் பெல்லாம் மெத்த தண்ணீர் தாகவெண்டும் மிகவும் கைக்கும் நாவுலரும் மெத்தச் சிறு நீர் மலந்தானும் மொழி சேற்பன்ம் மஞ்சணிக்கும் சத்திப் பார்க்கும் முகங் கருக்கும் கொல்லாமிறம் புண்ணுமே–

2. நாசி நீர் சிகப்புண்டா தலைவலி நேயுமுண்டாய் கூசவே வெறுத்தக் கொம மிக் கொடிய தோர முழக்கு புண்டாய் வாச மென குழலாய் தாகமருவிடு நோயு முண் டாய் பேசலாம் வெறுப்பின் நன்மை பித்தத்தின் சுரந்தாமே.–

3. வன்னி பேர் சுரமே மூர்ச்சைமதியுதி சாரம் வாந்தி பின்னையும் புசைப்புத் தாக பெரு முகமடி தாங்காது மின்னிடு முகிருப் கண்ணும் மேனியும் பேத மாகப் பண்ணிடுங் குளிர்ச்சி வேண்டும் பியத்திய சுரம் தாமே.

4. பித்த சுரத்தின் குணஞ் சொலிற் பெரிதா முழலை மிகச் சொரிக்கும் மெத்த மணல் போலேயிருக்கும் மிகவே கழுத்தும் நாவரளும் குத்தந் தலையில் வலியுள் தாங் கொடிதாம், பித் முக்கூரும்சுத்த சேட்டும மொரு கூழஞ் சொன்னோம் பித்தசுரத்தடவே.

காசத்தின் குணம்.

1. காசத்தின் குணம் காசமிருமல் கட்டி விழும் களைந்து
சேருமடிக்கடி தான் நாசி யளலாந் தனல் போலாம்
நளிரு முடம்பு வத்தி வரும் மூர்ச்சை நாறி பஞ்சவர்ணம்
முதிரம் விழும் வாந்தி பன்னவும் நளிச்சைக் குரலுங்கம் விடும் முத்து வெதும்பு, முரமாலே

2. முந்தார காசம் வந்தால் வாங்கிடுஞ் சுவாச மெல்லாம்
மிந்தாமே சுரமும் கானறு மிளைத்திடு மிரும் மெத்த சந்த
வாய் தலையுடம்பு தளர வலிக்கு மினப் பாகும் பந்தாது
உடம்பு நெஞ்சு முகம்பற்றி வலிக்கும் பன்பிதுவே.

3. பித்த காச மிருமல் மிகப் பிரட்டி முறுக்கியல்புதற்கு சத்தி
யெருத் திருமலுண்டாய்த் தலெய் முடம்பு தான் வலிக்கு
குத்தி விருமுன் குறல் கம்மும் கூற்ச் சரீர் மிளைக்கும்
தித்தித் திருக்கும் வாயூரல் சிவந்த நீரே தானுறும்.

4. வாத மெழும்புட லை வாக வயிற்றி முறுக்கி வலி
எடுக்கும் போதிருமி சத்தம் விழும் புண்ணறு மிடற்ம்
புகை யெடுக்கும் கரதுங் கண்ணும் வலி எடுக்கும் கடுக்கு
முடம்பு கணுக்க ளெல்லாம் ப்ாதி நோகும் பற்க்கடுக்கும் பாயிற் படுக் கொட்டாதே

5. இடுப்புடன் முள்ளந் தண்டு இரு வலாப்புரமும் நெஞ்சும்
நடுக்கியே

5. இடுப்புடன்முள்ளத் தண்டு இரு விலாப்புறம் நெஞ்சு
நடுக்கியே குளிர் வெதம்பும் நய்யவே கொதித்துக் குத்தும்
மருத்திடு முள்ளந் தண்டு முதற் சேவும் மயக்க மோடிருமிச்சியும்
கொடிக் கொள் விழுந்த தென்னில் கோளிழு விப்புருதியாமே.

6. இந்த நோய் நின்ற நாளில் இருமியே செய்யமுண்டாய்
வத்திடு நாவும் வித்தி மிடித்திடுஞ் சேர்ப்பமாகும்
முந்தவே அய்யம் பித்தம் முருகிடுங் குளிர்ச்சி வெற்புவந்த
ஞ்ச்சிலேப்பிடி ரெத்தம் வந்திடில் மரமாமே.

7. அண்டியே இருமல் குத்தும் அடிக்கடி ரெத்தம் விழ்ந்து
மண்டியே உட்டும் வத்தி வழுவழுத்து விந்து வாயும்
பண்டியுஞ் சிமஞ்கிருளம் பதங்கெட வரு ப
மேயாகில் உண்டில் லே ரெத்த ரேக மென்றறிந்து ரைக்கலாமே.

8. மர்தர் மயக்கில் மருத் தீட்டில் வந்தே யிருமல்ப்புலால்
நாற்ம்க்ருகதமிகவே பயித்தியமும் செரியார் தெரித்திட்டுடிப்
மிடும் வாத மிகவே காடி விடுத்தில் வந்து மீளயிருமல்நீதிபுயுல்
நேசர் சலத்தின் மிக நின்றே மயக்கிக் கொன்றிடுமே.

இ ர த் த பி த் த க் கு ண ம்.

இரத்த பித்தத்தின் குணம் நெஞ்சு பேத்தி நறுக்கு நறுக்கென்ற நோகும். உடம்பு முறிகிறென்ற வரும், வாயாலும் மூக்காலும் எல்கு கழுவின் தண்ணீர் போல விழும். கைகாலோஞ்சு வரும். உடம்பு வெளுத்திருக்கும். உன்ன வேண்டியிராது. முகம் கடு கடுத்திருக்கும்.

இதற்கு மருந்து :- மேல் அழிஞ்சி கொழு கொழுந்தும் திற மிளகும் அரைத்து விழுங்கிட இரத்தவித்தம் நிற்கும். இதற்குக் குடிநீர் சந்தனம், இரு வேலி வேர் எலுமிச்சம் வேர் பற்பாடகம், முத்தக் காசு இலுப்பைப்பூ இவையெல்லாம் வெவ்வொன்றுக் கும் பலம் கொண்டு வந்து நறுக்கி இரு நாழி நீர் வார்த்துட உழக்காகக் காய்ச்சி காலமே குடிக்க, ராத்திரிக்கு இரண்டத்தனை குடிக்க ரத்த பித்தம் நிற்கும்.

இதற்கு நெய் :- அறுகன் காறு நாழி வெள்ளாட்டுப் பால் நாழி அருகன் வேர், கொடித்தான் செங்கழுநீர் கிழங்கு, தாமரை வளையம் அதி மதுரம், ஏல மிலவங்கம் கொட்ட முந்தரிகைப் பழம், பேரீச்சம் பழம், முத்திக் காசு, நன்னாரி வேர், சந்தனம், இலுப்பைப்ப இவை வகை வொன்றகது பலம் கொண்டு அருகன் காற்றில ரைத்து இரு நாழி பசுவின் நெய்யில் கூட்டி பதத்தில் வடித்து நக்கவும்.. நசியம் பண்ணி னும் ரத்த பித்தம் நிற்கும். கற்றமீனியும் சர்க்கரையும் நெல்லி தான்றிகூட்டி விழுங்க இரத்த பித்தம் நிற்கும்

வேறு.

நிலப்பனைக் கிழங்கும் செம்பருதிப் பூவும், சர்க்கரையும் பால் வார்த்துக் குடிக்க நிற்கும் சீலைச் சாம்பல் மஞ்சள் முள்ளி மூலக்கறட்டை, வேர் இவை பொடி செய்து வெருகடி பெங என்னையில் குழைத்து விழுங்கக இரத்த பித்ம் நிற்கும். அறுகும் பருத்திலையும் நறுக்கி சீலையில் கட்டி முகந்து பாக்க நிற்கும். கடுக்காய் சமன் பண்ண பித்தம் நிற்கும்.

மாங்கொட்டை முலைப் பனி நசியம் பண்ண இரத்த பித்தம் நிற்கும். சாணகச் சாற்றில் திப்பிலி கூட்டிக். கொடுக்க ரத் பத்தம் நிற்கும்.

குதிரை லத்திச் சாற்றில் தேனுங் கூட்டிக் குடிக்க இரத்த பித்தம் நிற்கும்.

மாரிய பித்த வாந்தி மீள நல் மருந்து கேளாய் கூறிய நெல்ப்பொரி, திப்பிலி, ஏலம். கல்கண்டும், நாரியப் பருத்தி யிருடையப் பருப்போடொத்த மிர்தமதாக்கி யுத்தியே.

வாத ராக்ஷதக் குளிகை.

சித்திர மூல வேர்ப்பட்டை நிறை 2 மிளகு நிறை க, கடுகு நிறை. க, காட்டு முருங்கைப் பட்டைச் சாறு காயம் செய்து அந்தச் ~~சாற்றில் *முப்பாறுநிகை*~~ சாற்றில் முப்பாறுநிகை அரைத்து சிறு சுண்டைக்காய் அளவு அம்மாத்திரை நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு பித்த ரத்தக்கு வெந்தயக் கஷாய மிஞ்சிறல் சீரகம் விக்ஷணை காந்தி கஷாயத்திலிடலாம். வாதசுரத்துக்கு சுக்குத் திப்பிலிமிளகு கஷாயத்திலிடவும்.

தாம்பிரபற்பம்.

கை வேளையின் சாத்தானே கெந்தகத்தை யாட்டி-சாதமாய் மூன்று தினம் அரைத்துப் பின்பு-மை போலே மெழுகுங் குகை போல் பண்ணி-மன்னெனிற குகைக்குள்ளே வைத்துப் பின்பு-கையென்ற செம்புதகடொய்த் தட்டி காஞ்சிரையின் பழச் சாற்றினா ரப் போட்டு. போட்டங்கே பக்ஷமொன்று செஞ்சு வாங்கி*புகழ். சினக்காரமதை மேலே பூசி மூட்டுவாய் சிறுபுடமாய் ஒரு புடத்திலே தானே-மூதன்டாகியது நீறிப் போகும் பூட்டுவா யந்திடைக்கு-லிங்கந் கூட்டி-புகழாக அரைத்தனை வலிலை சுட்டே அரைப்பதுதான் எருக்கம் பால் தன்னாலாட்டி-அப்பனே ஒட்டில் வைத்துக் சிறுபுடமே போடு-துரைக்குருவாஞ் செந்தூரம் முருக்கம் பூப் போல-சொர்ன மென்ன இதற்கீடோ குணமேது-அரைப் பணந்தான் திரிகடுகு தேனில் கொள்ள-அப்பனே குன்மமொடு வாய் வெல்லாம்-காசுக்கு சுரப்பனொடு பெரு வயறு நீராம்பல்-கவுசி கென்னட காணுதன்றே.

பொரிகார மஞ்ஞட்சப்பு பக்குவமாய் எட்டு வகை உப்பை வாங்கி சாங்கம்பப் பொடித்து நன்றாய் பாகில் பேர்ட்டு-சமரசமாய்க் கிண்டி வாய் மெழுகு மாகும் ஆகினவே மெழுகுதனைப் பீங்காளுள்ளே அடைத் நீ ஜமாய் வைத்துப் போற்றே. போற்றியே மெழுகுதனை மைந்தா கேளு-புத்தியுடன் பத்து நாள் கொள்ளச் சொல்லு தேற்றியே கொண்டதினால் ஆத்திக் குன்மம்-திரண்டதொரு வரய் விஷல் வலி குன்மங்கள் சாற்றியதோர் நெஞ்சடைப்புப் பித்த குன்ம மஞ்சளஞ் செய்யும் பெரிய குன்மம்-ருத்திர வாயுவு ஆத்தியதோர் சூதகத்தில் வலியோடொக்க-அரகரா-குறுக்கு வலியற்றுப் போமே.

கற்பூர சிலாசத்துப் பற்பம்.

கற்பூர சிலாசத்து விராகனிடை பத்து வெண்காரம் விராகனிடை பத்து இரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து எலுமிச்சப் பழச் சாறு விட்டரைத்து வில்லை தட்டிக் காயரைத்து புடம் போடவும்.

தாம்பிரற்பம்.

தாளகத்தைத் தேன் விட்டரைத்து செப்புத்தகட்டில்தடவிப் பூசிக் காயு வைத்து ஒட்டில் வைத்து ஒடு மூடி சீலை செய்து முழப்பும் போடவும். இப்படி மூன்று தடவை பழச் சாறு விட்டு முழப் புடம் போடவும்.

காரீயம்.

காரீயம் தகட்டுக்கு ஆவாரை யிலையை அரைத்து அதின் வைத்து மூடி புடம் போடவும்.

மண்டூர பஸ்மம்.

ஊமவருஷத்து சிட்டம் கொண்டு வந்து உனில்காம்ச்சி பசுவின் மோரிலே நனைக்கவும். மூன்று தரம் மறுபடி எடுத்து மோர் விட்டு அரைத்துப் புடம் போடவும். மறுபடியும் ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயி வைத்து கன புடம் போடவும். கரிப்பான் சாள் கால் படியும் வேலிப் பருத்திச் சாம்பல் கால்படி-மிளகு பலம் ஒன்று

சுக்கு பலம் ஒன்று திப்பிலி பலம் இ, பொடி எல்லாம் செய்து இதில் வெருகடியளவு இருபது நாள் சாப்பிடவும். கீரைத் தண்டு அவரைப் பிஞ்சு முருங்கைப் பிஞ்சு-பசு வின் மோருங் கூட்டவும்.

காந்த மெழுகு.

காந்தம் பலம் ஒன்று, ரசம் பலம் 1/8, காரம் விராகனிடை ஐந்து, சவ்வீரம் வி.ஐந்து. கெந்தகம் பலம் இரண்டு தாளகம் விராகனிடை இரண்டரை மனோசிலை விராகனிடை இரண்டரை, பழச்சாற்றால் இரண்டு சாமமரைத்து தண்ணீர் விட்டுக் கழுவிப் போடவும். மறுபடி எடுத்து காட்டு வள்ளிக் கிழங்குச் சாத்தில் மத்திச் சுக்காடித் தண்ணீரை விட்டு கழுவிப் போடவும். வெய்யிலில் காய மெழுகாகும்.

அயச் செம்பு.

அயத்தகடு தட்டி காட்டு வள்ளிக் கிழங்கு அரைத்து கவசம் தட்டி புடம் போடச் செம்பாகும்.

பறங்கிப்பட்டைச் சூரணம்.

பறங்கிப் பட்டை பலம் இரண்டு-மிளகு பலம் நாலு இரண்டையும் சேர்த்துக் காயவைத்து இடித்து வடிகட்டி வெருகடியளவு வெந்நீரில் கொள்ள ஆறாத விரணங்கள் கடுப்பு வாயுவு திரட்டாய் வடிசலம் சூலக்கட்டு மேல்கருப்பு, மேகவாயுவு-தீரும்.

பிரதாப சூரணம்.

சூதம் கெந்தகம், நாபி, மனோசிலை, வெங்காரம், ஒவ்வொன்றுக்கு களஞ்சி விராகன் ஒன்றுக்கு எட்டு மிளகு தூளை ஒரு பணவிடை வெத்திலையில் மடித்துத் தின்ன சற்றே சுடு தண்ணீர் கொடுக்கவும்- இதுக்குத் தீரும் வியாதி:- இரிச்சம், ஓயாமல் வருகிற சுரம், எட்டு வகை வாண்டு, உளமாந்தம், அக்கினி மாந்தம், எட்டு வகை வாய்வு, வாந்தியும், சுவாச மந்தார காசம், மந்தாராக்கினி தீரும்.

அஷ்ட ரசம்.

கருவூமத்தன் சாறு பலம் ஒன்று அஞ்சான் காய்ச்சல்வெடியிப்பு பலம் ஒன்று, முருப்பு பலம் ஒன்று, ஆகப் பலம் மூன்று குழிம்மியிலிட்டுக் கொண்டு அரைக்கத் தண்ணீர் வற்றுமளவு அரைத்து பில்லைசெய்து காய்ந்ததின் பிறகு ஒரு ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் செய்து நிஜபுடமிடவும்.

வெடியுப்பு கட்டு திட்டம்:- வெடியுப்புப் பலம் பனிரெண்டு, எடுத்து பழைய மண் சட்டியில் பேட்டு முக்கால் படி தண்ணீர் விட்டு தெளியவைத்து தெளிவிருத்து அடுப்பில் வைத்து கமலாக்கினி யெரிக்கவும். கொதிக்கு ஒரு கரண்டி கொண்டு கிண்டிக் கிண்டிக் காய்ச்சவும். அப்போது ஒரு புது ஓலைஒரு சாண் நீளம் நறுக்கி வைத்துக் கொண்டு அந்தக் கரண்டு கொண்டு* கொண்டு ஒரு சொட்டு எடுத்து அந்த ஓலையில் குத்திப் பார்க்கவும். பதம் வந்தல் உரைந்து போகும். அந்த எண்ணை எடுத்து மருச் சட்டியில் கதிர் பாய்ந்திருக்கும். அந்தத் தண்ணீரை இருத்துப் போட்டு அந்தஉப்பை எடுத்துக் காயவைத்து சாயங்காலம் மறுபடியும் அந்தச் சட்டியில் போட்டு அந்த முக்கால் படி தண்ணீர் விட்டுக் காய்ச்சியப் பதம் கண்டு எடுத்து மறு சட்டியில் இருத்து வைத்து மறு நாள் யெடுத்தால் கதிர் பாய்ந்திருக்கும். அந்த உப்பைஎடுத்து காயவைக்கவும். இப்படி மூன்று தரம் காய்ச்சவும். வெள்ளைப் பாஷாணம் பலம் ஐந்து; நாகம் ஐந்து, சட்டிக்கு அரைவாசி போட்டு பெரிய கலயமாக இருக்க வேணும். அந்த அஞ்சு களஞ்சி பாஷாண கட்டியை துலால் கட்டி அந்தக் கலையத்துக்குள் போட்டு வெள்ளை எருக்கம் பால் அரைச் சட்டி அமுங்க விட்டுக் கொண்டு வந்து ஒரு ஓட்டிலே உமி போட்டு தீப்பத்தி அந்த உமி தீ ஆனதின் பிறகு அந்த கலசத்தைஎடுத்து அந்த தீயில் வைக்கவும். பால் வற்றமளவுஇருந்ததின் பிறகெடுத்தும் மாடாக் குழியில் வைக்கவும். மற்றுநாள் எடுத்து

எடுத்துப் பால் கறந்து அந்தப் படி உமியேட்டில் வைக்கவும். இப்படியே ஏழு நாள் வைக்கவும். எட்டா நாள் ஆனல் அந்த பாஷாணக் கட்டியை எடுத்துவைத்து அந்தக் கட்டியை நடுக்கலயத்தில் வைத்து தலையம் நிறையப் பால் கறந்து அந்தக் கலயத்தின் மேல் ஒடுமூடிச் சீலை மண் செய்து கோழிப்புடம் மிடவும். தீரும்.

சிறு கன்னுகம் நொறுக்கிந் நாள் செய்து சம் பழச்சாற்றிரப் போட்டு அந்தச் சாற்றில்செம்பு காச்சித் தோய்க்கவும். ஆறு தடவை தோய்க்கவும்.

சீராரும் பொரிகரம் ரதமோடு நாபி சிலையுடனே
கெந்தக மந்தாமுடனே காயம்
தாராரும் சருக் சீரகம் நிற் வீகும் கூட்டி
தனித் தனியாய் விராகனிடை சமனுகக் கொண்டு
வேலிப் பருத்தியிலைச் சாற்றில் ஆருசு விராகனிடை ரெண்டு
துத்தம் விராகனிடை இரண்டு வெள்ளைப் பாஷாணம் வீ. இரண்டு
ஊமைத்தன் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து ரெண்டு
மணிப் பிரமாணம் உண்டை பண்ணி மூன்று நாளாகில்
எடுத்துக் கொண்டு சுரம் கண்ட ஒன்பதாம் நாள் ஒரு மாத்திரை போடக் கருப்படியில் நசிக்கிக் கொடுக்கவும். இப்படிமூன்று நாள் கொடுக்கவும். உப்பு தவிர்க்கவும்.

சவ்வீரம் விராகனிடை இரண்டு, அரிதாரம் விராகனிடை இரண்டு, ரசகற்பூரம் விராகனிடை இரண்டு மயில் வெட்டி வீ.2, இந்த மூன்று சரக்கையும் நறுக்கு வேப் பெண்ணெபடி கால் அதில் போட்டு மேல் இந்தப் பெரியும் போட்டு கீழும் மேலும் சட்டி மூடி சீலை மண் செய்து எறித்து சத்தமாறிறக்கவும். காலமே ஒரு நெல்லிக் காய் பருப்பு அளவு இஞ்சி சாற்றில் கொடுக்கவும். சாயந்திரம் அரத்தைக் கஷாயத் தில் கொடுக்கவும். ஆறு நாளைக்குத் தின்னவும். கெற்பச் சூலை பிரமேகம் பவுத் திரம் மீளை மந்தார காசம் தீரும்.

....

சுரத்துக்கு மருந்து-பாஷாணம்.

பாஷாணம் வீராகனிடை ஒன்று-பாகல் காயில் வைத்து சிறு நீர் விட்டுப் பத்து தரம் வெந்து மருபடி பொடி பண்ணி ஒரு சிரட்டமடையில் வைத்துச் சுண்ணும்புத் தண்ணீர் விட்டு மூன்று நாள் வெய்யிலில் வைத்து இதில் கையில் பூரம், கால்விராகனிடை கூட்டி அரைத்துக் கிண்டி குன்றியளவு கஷாயதில் கொடுக்கச் சீத சுரம் நாலு நாளை மாறலிவை தீரும்.

கெவுரி பாஷாணம்.

கெவுரிப் பாஷாணம் விராகனிடை க., மூன் பாஷணம் போலே சுத்தி செய் ததில் ஒரு களஞ்சி கையில் பூரம் கூட்டி பொடி செய்து குன்றியளவு தேனில் திரிகடுகு பொடி செய்து கொடுக்க கிராகனிஅதிசாரம் கடுப்பு மிவை தீரும்.

வேறு.

அகில் கட்டை பலம் அஞ்சு, சந்தனக் கட்டை பலம் 5, சாதிக்காய் விராகனிடை 1½, சாதிபத்திரி விராகனிடை 1½, வெள்ளைப் பூறு விராகனிடை 1½, வங்காளப் பச்சை விராகனிடை 1½, கச்சோலம் விராகனிடை 1½ சடாமாஞ்சி விராகனிடை 13/4, மஞ்சிட்டி விராகனிடை 1½, செண்பகப்பூ விராகனிடை 1½, ஏலம் விராகனிடை 1½, இலவங்கப்பத்திரி விராகனிடை 1½, வெட்டிவேர் விராகனிடை 1½, சித்தரத்தை விராகனிடை 1½, தேவதாரம் விராகனிடை 1½, நாகப்பூ விராகனிடை 1½, வெள்ளி லோத்திரம் விராகனிடை 1½, அதிமதுரம் விராகனிடை 1½, கெஞ்சந்தனம் விராகனிடை 1½, புழுகு சட்டம் விராகனிடை 1, தாழம்பூ விராகனிடை 1.

18.7.62.

துத்தம்-

துத்தம் வேண்டியது கொண்டு வந்து வெள்ளாட்டு நீரில் விட்டு சூரிய புடம் வைக்கவும். அதை எடுத்து நீர் விட்டுக் கழுவி நிழலில் உலர்த்தி சதுரக் கள்ளிப் பால் விட்டு ஐந்து நாழிகை நிழலில் வைத்து உலர்த்திப்போடவும். பிறகு பச்சை மஞ்சளரைத்துக் குகை பிடித்து குகைக்குள்ளே மருந்தை வைத்து பொதிந்து கலசத்தில் வைத்து குக்கிட புடம் போடவும். மறுபடி மஞ்சளித் தள்ளிப் போட்டு பாலிலாவது வெண்ணெயிலாவது வைத்து ஒரு பணவிடை ஏழு நாள் கொடுக்கவும். பவுத்திரம் கெட்டும் தீரும்.

குன்மத்துக்கு மருந்து.

மிளகு 3½, பூடு.3, பெருங்காயம் முத்தாளியிலையை வதக்கி காயம் போட்டு தண்ணீர் வைத்துக் கீரையும் சாப்பிடவும். தண்ணீர் குடிக்கவும்.

பாஷாணக் கட்டு.

பாஷாணம் கட்டி வாங்கி ஒரு நாழிகை காலி நெய்யில் கொடுக்கப் கட்டிப் போம்.

தாளகக் கட்டு.

தாளகக் கட்டி வாங்கி முன் காலி நெய் ஒரு நாழிகை கொடுக்க கட்டிப் போகும்.

பூரக கட்டு.

பூரம் கட்டி வாங்கி பின் கட்டிக்கு மஞ்சான வில்லை கூடன் வீ.4 இரண்டு பொடி பண்ணி ஒன்றாய்ச் சேர்த்து பூரத்துக்கு கீழ் மேல் மூடி தீக் கொளுத்தவும். இப்படி 4 தரம் கொடுக்கவும் பின் விளக்கெண்ணெயும் மிளகு மரைத்து ஒரு தாளிசை கொடுக்க பூரம் கட்டாச்சுது.

வாயுவுக்கு மருந்து.

வயிற்றில் இரச்சலுடன் உண்டாகும் வாயுவுக்குத் தயிர் படி அரை மிளகு சீரகமும் வறுத்துப் பொன்னிரத்தில் இறக்கிக் கடையவும். பின் அந்தத் தயிருடன் ஊற்றி மூடிவைக்கவும். பின் தெளிவிருத்துக் கொடுக்கவும்.

லிங்கக் கட்டு.

லிங்கம் கட்டி வாங்கி புளிமாங்யாச் சாறு நாலு ஜாமம் சுருக்கு கொடுக்கக் கட்டிப் போம்.

சுரத்துக்கு மருந்து.

தானென்ற யேலம் அதிமதுரஞ் சுக்கு சாதிக்காய் பொன்பெருகு
இலவங்கப்பட்டை-நானென்ற சந்தனமுந் தேவதாரம் நன்னாரி வேருடனே முத்தக்காசு
கோனென்ற கோரோசனை கடுகு ரோகணி கோஷ்டமொடு
இலுப்பைப் பூ இலாமிச்சம் வேர்-ஊனென்ற முதிரிகை. போர்த்தநெடு உயர்ந்த
ஜடா மாஞ்சி திப்பிலியுமாமே-

ஆயடா பச்சிலையும் வகையொன்றுக்கு-அப்பனே கதஞ்சி யென்று கடலவத்திட்டு
தாமடா கருப்பஞ் சாரின நீர்விட்டுத் தானரைத்துச் சுண்டைக் காயளவதாக
யோமடா ஊட்டி யுலத்திக் கொண்டு உத்தமனே யின்னறத்தில் வேகவைத்து-போமடா
யின்னீரில் சீனி யிட்டு-பொசிக்கவே குளிகை யொன்று போகும் நேயே-
நோயேது பித்த சுரம் பித்த மெல்லாம்-நோகவே. சத்தி விக்கல்நொடிக்குள் தீரும்
நீபோது பத்தியந்தானரை உப்பிட்டு-நெய் துவரைப் பயறுடனே அன்னங் கொள்ள
தற்போது பசுவின் பால் சீனி விட்டுத் தான் கொள்ள குடைலாம் தணியும் பாரு
வேலேது பயித்தியந்தான் கொண்ட பேர்க்கு-பெருங் கழுதைப் பாலிட பித்தம் போமே.

குன்மத்துக்கு மெழுகு:- போச்சென்ற குன்மமென்ற தெல்லாம் போக-புதுமையுள்ள லேகி
சொல்லார் கேளு. காய்ச்சென்ற கருப்பட்டி பலந்தான் பத்து கருவான
அமரியினுளர் கரைத்துக் கொண்டு பாச்சுவாய் அடுப்பேத்தி யனலைமூட்டிப்
பக்குவமாய்க் காய்ச்சுவாய் பாகு போலே தாட்சியில்லாப்
பாகத்தில் சேரு மருந்து-தப்பாமல் சுரமொடு காரம் விளக.

வாங்குவாய் வெடியுப்புக் காரந்தான்-வளமான வளையலுப்பு இந்துப்போடு
பாங்கு நேர் பொரி காரஞ் கடலுப்பு-பக்குவமாய் வெட்டு வகை உப்பு
வாங்கி சுங்கமாய்ப் பொடித்து நன்றுப் பாகில் போட்டு-சமரசமாய் கிண்டு
வாய் மெழுகு மாகும்-ஆங்கெனவே மெழுகுதனைப் பீங்கானியுள்ளே அடைத்து
நீ பதனமாய் வைத்துப் போற்றே.

போற்றியே மெழுகுதனை மைந்தா கேளு-புத்தியுடன்
பத்து நாள் கொள்ளச்சொல்லு-சேர்த்தியே கொண்டதினால்
சத்திக் குன்மம்-திரண்டதொரு வாயுவினால் வலி குன்மங்கள்
சாத்திர நேக நெஞ்சடைப்பு பித்தம் குன்மம்-சஞ்சளஞ்
செய்யும் பெரிய குன்மம் மருத்தி வாயுவு-ஆத்தியதோர்
சூதகத்தில் வலி யோடொக்க-அரகரா குமக்கு வலி யனைத்தும் போமே.

நேத்திர ரோகம் வெள்ளெழுத்துக்கு ஆனந்தக் களிப்பு.

மா முருங்கை வித்து நூறு -- தின
மாக நாழுண்ணு மின்கொரு -நூறு
ஆமிலரைத்திடு சாறு --- டனே
யப்படியே கல்வந்தனிலே யாறு
நாழிகை வய்யலில் வைக்க --- தைலம்
கல்லதாய்த் தேறுமே காரமொடொக்க
வீழு மெடுத்தொரு பக்க -- விழி
மீதிலே யோர் துளி போட்டே கதிக்க
வெள்ளெழுத்தாணியும் நோகும் -- ரண
மேவும் பலவித ரோகங்க ளேகும்
தெள்ளு தமிழ் முறை யாகும் -- இதிற்
தேர்ந்தவர்க் கேரவரு சுலம் தாகும்
மற்றொரு மாமருந்துன் --- நல்ல
பாரிசந் தன்னிலே யோரிலை --- யுண்டு
வற்றுங் கறித் தூத்தம் ரண்டு --- நெல்லி
வற்றல் களஞ்சிடை யாகவே கொண்டு
சம்பள்க் சாற்றினை விட்டு திரி
சாம மரைத்துக்கு குறுக வுருட்டு
வெம்பு விழியிலோர் பொட்டு --- தன்னை
விட்டால்நேக் நோய் விட்டோர்டுங் கெட்டு (தந்தனம்)

எலிக்கடி நோய்கட்டு மருந்து.

தானன	தந்த	தந்தன	தனதாளு
மாதாவ	சந்த	ஞுங்கறி	
வேரது	கொம்பு	டன்கடு	
மாத்வன	னன்ப	ழுஞ்சிறு	பையர் தேரு
மாலெனு	வண்டு	விளிறன	
மாது ளை	பிஞ்சு	சங்கிலை	
மால்முகி	துங்க	ரந்ததய்	னடிவேரும்
போதமி	லங்கு	மந்திரி	
மாதவி	செங்கை	யும்பரி	

பூமக ரந்த நிம்பமி வங்கயோடு
பூரிய மஞ்ச ஞும்போது
புத்து மிஞ்சு குஞ்சரி
புலைவ ணங்கி பிண்டியு மிலைாவு
இதர முள்போ ருந்திய
பாதிப ழஞ்சு லந்தனி
லாறினி லொன்று வெந்தலி ஞறு நேரம்
ஞளமி தம்ப தம்பிடி
யீதறு பங்கி சைந்திடு
ஆசையு டன்க வர்ந்திட எலிநோயின்
வாதைய கன்றி ருந்திட
வேலவ ணம்ப ழுங்கஞு
மாமிச ழுங்கி ரந்தியு விடுவாயே
வாகைநி றைந்த டம்புவி
காலமு டஞ்சி றந்திடு
மாதவ ரன்ற ரைந்திடு முறையாமே.

நாலாம் மாறலுக்கு மருந்து.

நிலப்புருவு நாலு கொண்டு வந்து ஒரு சுண்டைக்காய் போலே அரைத்து பனை வெல்லம் சுண்டைக்காய் போலக் கூட்டிக் குழைத்து முழுங்க நாலு நாள் மாறல் தீரும்.

குளிருக்கு மருந்து.

கஞ்சாங் கோரை சமூலம் கொண்டு வந்து அறிந்து காயப் போட்டு தூளாக இடித்து அதிலே மஞ்சள் பொடி செய்து மிளகு பொடி செய்து அகமதப்பிலும் காயமும் போட்டு கலந்து குளிர் வருகிற போது ஓட்டிலே நெருப்பு கொண்டு வந்து அந்தப் பொடியெல்லாம் தூப்பட்டி கம்பிளி போட்டு மூடி நிறம்பப் புகை பிடிக்கவும் குளிர் நிற்கும்

மலஜலு மடைத்தால் மருந்து.

தடுப்பலிலப்பட்டையைத் தட்டி சிறுக நறுக்கி ஒரு பிடி அளந்து கொண்டு கருங் கொள்ளு ஒரு பிடி அளந்து போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு காய்ச்சி ஒரு படியாக இருத்துக் கொடுக்கவும்.

சஞ்சிவி அக்கினி குமாரச் செந்தூரம்.

அரப்பொடி பலம் ஒன்று உருக்குப் பொடி பலம் ஒன்று செம்பு பொடி பலம் ஒன்று பித்தளை அரப்பொடி பலம் ஒன்று வெங்கலப்பொடி பலம்ஒன்று ஊசிக்காந்தம் பலம் ஒன்று இரசம் பலம் ஒன்று கெந்தகம் பலம் ஆறு வெங்காரம் பலம் ஒன்று மனோசிலை பலம் ஒன்று அரிதாரம் பலம் ஒன்று, திப்பிலி பலம் ஒன்று, இதுவெல்லாம் கற்றாழைச் சாறு விட்டு மூன்று நாளரைத்து அடி உரத்த சட்டியிலே இட்டு ஒரு சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து மூன்று நாள் விடாமல் நெருப்பெறித்து ஆற விட்டு எடுக்கச் செந்தூரமாகும். இந்த செந்தூரத்தை பதன் படுத்திக் கொள்ளவும். இதுக்கு அனுபானம் பச்சை நாவி பசுவின் கோமயத்தில் மூன்று நாள் ஊரப் போட்டு உலர்த்தி திப்பிலி மூலம் பலம் இரண்டு கூடப் போட்டு வெள்ளை வெங்காயம் பத்து விராகனிடை கூட அரைத்து செந்தூரத்துடன் கலந்து அரைப் பணவிடை உருட்டிக் கொள்ளவும்.

இந்தச் செந்தூரத்தில் அரைப் பணவிடை வெள்ளுள்ளித் தயிலத்தில் நாளைக்கு இரண்டு நேரமும் கொள்ள வாயில் கொருப்பு தள்ளுகிறது தீரும். செந்தூரம்மாத்திரையும் சீனி சர்க்கரை வெரு கடியும் கூட்டித் தேனில் பத்து நாளைக்குக் கொள்ள கல்லடைப்

பல் பதினெட்டு அடைப்பல் கல்லடைப்பல் இந்திரி கடி அஞ்சும் ஆந்திர வாயுவு பித்தம் நூற்றிருபத்தெட்டு உஷ்ணரோகம் நூற்றிருபத்தாறு, சேற்றும ரோகம் தொண்ணூற்றாறு வாய்வுத் திரட்சி முப்பத்தாறு பெருவயறு காமாலை பாண்டு விஷப் பாண்டு முதலானதும் தீரும்.

வாய்வுக்கு மருந்து.

சுக்கு பலம் ஒன்று, மிளகு பலம் ஒன்று, நிலவேம்பரச் சமூலம் ஒரு பிடி வெள்ளருகு ஒரு பிடி இது வெல்லாம் இடித்து நாள் பனி கொம்புத் தேனில் மூன்று விரல் கொண்டு கொள்ளவும். எட்டு வகை வாய்வும் தீர்ந்து தீர்ந்து போகும்.

கண்ட மாலைக்கு மருந்து.

கார்த்திகைக் கிழங்கு, தாழைவிழுது, துளசியிலைச் சாறு வார்த்து கல்லுப்புக் கூட்டி அரைத்துப் பூசவும் தீரும்.

சர்வ தோஷத்துக்கும் மருந்து.

கருவேப்பிலை விடத்தாளிக்-கம்பரிசி, இது மூன்றும் வறுத்து அரைத்துப் பொடி செய்து சர்க்கரை நற்சரகமும் பொடி பண்ணி கூடப் போட்டு கலந்து மூன்று விரல் கொண்டு எடுத்து உட் கொள்ளவும். சகல விதமான தோஷமும் இதனால் தீரும்.

குளிர் சுரத்துக்கு மருந்து.

சிவத்த கொளுஞ்சி வேரை நசுக்கி ஒரு சேரை சாறு பிழிந்து கொடுக்கத் தீரும்.

கொடிப்புவுத்திரம், ஆசனப்புவுதிரத்துக்கு மருந்து.

தாவசி முருங்கைச் சாறு ஒரு பிடி, நல்லெண்ணெய் ஒரு பிடி, சுண்ணம்பித் தெளுவு ஒரு பிடி சேர்த்து மூன்று நாளைக்கு கொடுக்கவும்.

வாத சுரத்தின் குணம்

முகம் கறுத்திருக்கும், இவர்த்தல், சரீர மெல்லாம் நோவுதல், தினவெடுத்தல், அதிர்தல், உஷ்ணமாயிருக்கும் தலை பாரித்திருக்குதல், குளிர் வருதல், மயிர் குச்செரிதல் இந்த குணங்களுடையது வாத சுரம்.

இதற்குக் கஷாயம்.

தழுதலை வேர், சங்கம் வேர், விஷ்ணு காந்தி கடுக்காய் தான்றிக்காய், நெல்லிப் பருப்பு சுக்கு இந்த எட்டு வகையும் சமனாகக் கூட்டியிரு நாழி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாகச் காய்ச்சிக் கஷாயமிட்டுக் கொடுக்க வாத சுரம் தீரும்.

பித்த சுரத்தின் நிதானம்.

நித்திரை வருதல், எழுந்திருந்து ஓடுதல், வாய் பிதற்றுதல், கைதிருவ வருகுதல், வாந்தி வருகுதல், விக்கல் எடுத்தல், சந்தாபம் உண்டாகுதல் இந்தக் குணங்களுடையது.

இதற்குக் கஷாயம்.

கொத்தமல்லி, சதகுப்பை அதிமதுரம், சுக்கு, வெட்டிவேர், ஆடாதோடை, பீர்க்கு, முத்தக் காசு, தண்ணீர் விட்டான் கிழங்கு, முசுமுசுக்கை வேர், இந்த ஒன்பது வகையும் சமன் கூட்டிக் குறுணி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி கஷாயம் இம்டு இறுத்துக் கொடுக்கப் பித்தம் தீரும்.

சேற்றும சுரத்தின் நிதானம்.

முகம் வெளுத்திருக்குதல், மார்பு நோவுதல், இருமுதல், இரைப்பு வருதல், அருவருத்தல், உருசி தெரியாமலிருத்தல், சுவாசம், விடாமலிருத்தல், தாக மெடுக்கல் மிடற்று நோகுதல், சுவாசம் வாங்குதல் தின வெடுக்குதல் இந்த குணங்கள் சேற்றும சுரத்தின் நிதானமென்று சொல்லுவர்.

இதற்குக் கஷாயம்.

கண்டங்கத்திரி வேர், சிறு காஞ்சொறி வேர், சந்தித் தண்டு, சிறு தேக்குச் சுக்கு இந்த அறவகையும் சமனாகக் கூட்டி இரு நாழி தண்ணீர் விட்டு காய்ச்சி இருத்தக் கொடுக்க சேற்றம சுரம் தீரும்.

தொந்த சுரத்தின் நிதானம்.

தொந்த சுரம் ஆறு வகைப்படும். அவை யாதெனில் வாதபித்த தொந்த சுரம், சேற்றம தொந்த சுரம், பித்த சேற்றம தொந்த சுரம், பித் வாத தொந்த சுரம், இந்த ஆறவகை என்ற கொள்க.

இதற்குக் கஷாயம்.

சீந்தில் தண்டு முத்தக் காசி, சித்தாமுட்டி வேர், கற்கடசிங்கி, சதகுப்பி, நில வேம்பு, கடுக்காய் சுக்கு இந்த ஒன்பது வகையும் சமன் கூட்டி இரு நாழி தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சக் கஷாய மிட்டு இறுத்தக் கொடுக்க தொந்த சுரம் தீரும்.

டமரா நந்தர் சூத்திரம் பதினாறு.

1. ஆனந்த நிற் ஞானத்திருளே காப்பு-தானந்த சதகாதிரி
உதரட் கெல்லாம்-தாசனென்று பேர் பெற்றட மார் நந்தன்
போனந்த பிரம வனு சந்தானத்தின்-மோகூ தவசுகியா
தீகை செய்தே வையா-ஞானந்தாசி பேசி த்தேன்
எழுத்தைந்தில்-தலமான வாதத்தை நவிலுவோமோ.

2. நவிலுவேன் சூத்திர யோகா பதினாறுக்குள்-நாதாக் கள்
மறைத்த வைத்த ஞாபமெல்லாம்-புவியிலுள்ளோர்
அறியாமல் சித்தர் கூடி-பூவழிலே என்று சொல்லும் மூட்டகத்தை
செவி கொடுத்த கேளுங்கோ-பித்தச் சேதிதெருவில் வந்தால்
உங்கள் தலை தெரித்துப் போகும்-தவுலடித்திப் பேசாதே
ரகசியமப்பா-சவுக்காரமான தென்ன தனிலும் விண்ணே.

3. விண்ணிலே மூன்று சுடர் தோன்றலாச்சு-வெய்யோனும் சந்திர
னக்கினி தானெப்பார்-மண்ணிலே வந்தவுடன் முப்பூவாச்சு
வளர் பிறையைத் தொட்டு நிற்கும் பூசரந்தான்
தண்ணியிலே கண்ட சிலை யுருக்கலாச்சு-சமாதியுப்புச் சுன்னமடா
தழற் கூராச்சு-பெண்ணடுக்கலான ரவியும் காலலாச்சு
பேசாதே பிண்டத்தில் பிரித்துப் பாரே.

4. பிரித்துப் பார் வாய் லங்கியப்பு மூன்றும். பிண்டத்திலி
ப்படியே நின்றதைபா-விரித்த பார் பிருதிவியே பிண்டம் பிண்டம்
வேறேன்று மில் லையடா மிது தான் மூலம்-குறித்துப்
பாரிடைக் கடுரோன் ரெண்டுங் கூடி நிற்கும்-சுழி முனை
யின் கர்மை தப்பி-மந்த்தப் போகல் வருமோ சீவன்
ஜனும்-மயங்கினின்று திரியாதே மண்ணைக் கிண்டே.

5. கிண்டி வரப் பிசைந்த மண்ணைத் தண்ணீருக்குள்ளே-கழிருக்கு
வழு லையுப்பு கல்சென்பார்-கண்டு பார் நெற்றிக் கண்ணாகட்டி
யோனெப்பான கல்லென பாரைங் கோக் கனிதானென்பார்
விண்டு போகாத லஞ்சமிருத மென்பார்-விந்தை என்பார்
நாதமென்றுர் வெடிதாரென்பார்-கொண்டல் ஒன்னி
ப்ச மென்பார் சுன்ன மென்பார்-தேச மென்றும் ப்ச மென்றும் கூறுமேகே.

6. ஏகவஸ்து வென்றும் இரசு-வென்றும் எ.ஜ.ஒ.ஆ வென்ற
மிலக்க மென்றும் சாகாத காலென்றும் நீர்டான மென்றும்
சாரமென்றும் பஞ்சமென்றும் சட்சு வென்றும்-வவேகாத தலை

யெச்சம் வீர மென்றும்விச்வனென்றும் மிரனிய கற்ப விரா
ட்டனென்றும்-போகாத புலனென்றும் பூரண மென்றும்
புனில மன மென்று சொல்ப் பொருந்தும் பேரே.

7. பேரான பரிபாஷை பேர்கள் எல்லாஞ-பேயனுக்கும்
பேதையர்க்கும் பேர் தானுச்சு-கூறான மூன்று விதமான
பிண்டம் கோடா கோடிஎல்லா மிதற்குள்ளாச்சு
நீறான அங்கியுடன் காலுங் கட்டி-நின்ற விடம் வழலை யென்
பார் நந்தீகர்-தோர் தயொன்று மூலக் மாடே-சிவநாம
மென்னுநந் திரட்டிப் பாரே.

8. பார்க்கையிலே பனிச் சென்று பிரகாசிக்கும்-பரிதிமதி
யக்கினியும் பாழ் போகாமல்-சேர்க்கையிலே
கை சிக்கிக் கொண்டால்திடத்துடனே, சேரலமே சிவயோகத்திலே
நோக்கையிலே வழலையல் கற்ப மாச்சு-நொந்த
சடங் கற்பர தேகமாச்சு-நர்க்கை யல்லேர் தூக்கி விடு மேல் மூலத்துள்
நலமான பிராணனிற்கும் நாட்டந்தானே-

9. தேனென்ற வன்னிக்கு கும்ரனென்றே பேர்-தண்ணீரு வாயுவு
க்குப் பொன்னென்றே பேர்-ஏனென்ற சுழி முனையே ருத்திர ஞச்சு
யிடகலை பிங்கலை பிரும்மா விஷ்ணு வாச்சு-வானின்ற சிவ்வங்
யகரமாச்சு-வாமென்னும் யோகமென்று
மிரண்டே பேச்சு-ஊனென்ற சடத்துக்கு வஸ்து வித்ந்தி
ஒரு கோடி சித்தரெல்லாம் செய்திட்டாரே.

10. செய்திட்ட சடத்துக்கு தாயா பன்னில்-செலஞ் கோர்த்து
நின்ற விடமடிதானையா-மெய்திட்ட வாய்வும், மன்னறும்
சலமுங் கூடி வாரி கடலில் நின்ற விடம் நடு வென்பூர்கள்
எய்த்திட்ட அக்கினியும் சலுங் கூட்டி யிருந்த விடம் தலை
க்மேழன்றியம்பலாகும். செய்திட்ட திரிஞானலை முப்பூவை
குருமுனிறுரைத்த குரி கண்டீரே.

11. கண்டீரேன மண்ணுலே எல்லாமாச்சு-காய சித்தி வாத சித்தி
மன்னாச்சு-பெண்டீரும் பிள்ளைகளும் மண்ணுலாச்சு
பிறப்பது மிறப்பதுவு மண்ணுலாச்சு-தண்டான பொருளொன்றைக்
காணேனையா-ஞால விம்பரமிர கிருதி சூட்சமார்க்கம்
மிண்டான செதியல்லால்வேரேயில்லி-பச்சை ஒன்று
வெள்ளை யொன்று பஞ மொன்றே.

12. ஒன்றான வஸ்துவுக்கு மாலைகாலை உச்சி யென்னும் கூடரத்தில்
-ஓ-ஆ-ஊ வாம் நன்றான மேவு மொடு மீனம் கும்பம்
நாளோடு முற்பிறப்பற் பிறை நாள் மூன்றும்-குன்றான
வாலை திரி புரை வரைக்கும்-கூட்டிநல் தீக்ஷைக்கு குணந்தானையா
என் தாயார் சொன்ன வித்தை பதினெருக்கு இயம்பினேன்
புத்தியிலுலிசைந்து பாரே.

13. இசையாமல் செய்தாரே சவுக்காரத்தை-யிந்தென்ற வுவரசமும் கள்
சுண்ணாம்பும்-கசி வெடுக்கக் காய்ச்சியில்லோ என்னி குத்தி-கட்டு.
வாரா தியினுக்குன் களங்கங் கட்டும்--குசமசக்கு சவுக்காரம்
வல்லுனறுக்கு கோடி வெள்ளைக் காகுமல்லால் குருவாகாது-விசை
மிகுத்த வாய் வங்கியப்பு மூன்றும் வெளிப்பட்டால்
உருப்படலாம் விண்ணிப் பாரே.

14. விண்ணைப்பாராதவற்கு மவுன மேது – விந்தைச் சேர்ந்தவற்கு
கற்பமேது – மண்ணைப் பாராதவற்கு வாதமேது – வாணிச் சேராதவற்கு
யோகமேது – கண்ணைப் பாராதவற்குப் பார்வை யேது –
காலைத் தேடாதவற்கு ஒட்டு மேது – அண்டிக்கே போன வுயிரினைக் கேது
ஆசானைத் தேடி யடிமுடியைக் கேளே.

15. முடியென்ற வன்னி கொம்பும் கீழே சென்று – முந்திப் போலே
யிருக்குமிது தாள் சுன்னும். அடியென்ற புளியதுவு மேலாய் நிற்கும்
ஆநாச விந்து வென்றே யிதற்குப் பேராம் – நெடிய சிலைபோலிருக்கும்
முப்ப மார்க்கம் – நீலமென்று சொல்லுவார்கள் நடுவின்
கூறு – யிடியென்ற வஸ்து விந்தரெண்டில் சேர்ந்தால்
ஏகமென்ற சவுக்கார வழலை ஏன்றே.

16. என்னவே யானுரைக்கும் சவுக்காரத்துக்கு
கேணியில் லோசாரமோடு தமிசிரண்டும்
சொன்னபடி கேட்டுகமையா வீரம் பூரம்
தொட்டே ரச கல சித்தன் சுத்தம் செய்யும்
வின்னமில்லா மதிநூலே அண்டட
மேலேறிப்பார்க்கலாம் விலரசமெல்லாம்
தன்னையன்றி மிரமனிலை வேரேயில்லை
சவுக்காரந் தானறிந்த சத்துவுக்கே.

17. சத்து பதஞ்சலி வியாக்கி மருக்கு
தனதான பிள்ளைகளில் யானொருத்தன்
வித்தை எல்லாம் கண்டு கொண்டேன் வடமரத் தன்னில்
விசுவகர் மன்றனக்கு உபுதேசஞ் சொன்னேன்
சித்து விளையாடுதற்கு கிரந்தம் நூறு
செப்பினேன் சிவனாலைத் தெளிந்து பார்த்து.
அத்து விதமான திறல் டமார நந்தன்
அருளிய சொற்பதிநூறு மடக்க முற்றே.

சூரியானந்தர் சூத்திரம் பதினாறு.

1. சீரு கொண்ட அருபரையின் பெருளாய் நின்ற
தக்ஷண மூர்த்தி யிட பாதங் காப்பு
பேர் கொண்ட தத்தி மோர் பதினாறுக்குள்
பிரித்து வைப்பேன் பூவழலை பெருமையெல்லாம்
நேர் கொண்ட உபசரத்தின் மகிமை தன்னை
நிசமாகச் செல்லாமல் மறைத்துப் போட்டார்
ஆர் கொண்ட வேணியரு மெக்குச் சொன்னார்
